**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.364 நாள்: 07.08.2026

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மணலி மற்றும் தண்டையார்பேட்டை மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., (வடக்கு), திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்) ஆகியோர் இன்று (07.08.2026) பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தண்டையார்பேட்டை மண்டலத்தில் வார்டு-46க்குட்பட்ட வியாசர்பாடி சந்திப்பு பகுதியில் உள்ள மழைநீர் வெளியேற்றும் மோட்டார் கட்டுப்பாட்டு அறை மற்றும் சேமிப்புத் தொட்டியினைப் பார்வையிட்டு தொடர்ந்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், மணலி மண்டலம், வார்டு-21க்குட்பட்ட தாமரைக் குளம் மற்றும் வார்டு-20க்குட்பட்ட பகதூர் சாஸ்திரி தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளை வடக்கு வட்டார துணை ஆணையாளர் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திடவும், இதர வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், மணலி மண்டலம், வார்டு-15க்குட்பட்ட மணலி புது நகர், 80அடி சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் பூங்காப் பணி ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், அண்ணாநகர் மண்டலம், வார்டு-100க்குட்பட்ட குஷால் அடுக்குமாடி குடியிருப்புப் பகுதி மற்றும் ஆர்.பி.ஐ. குடியிருப்புப் பகுதியில் மேற்கொள்ளப்படும் பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களின் குப்பைக் கழிவுகளை பிரித்தெடுக்கும் பணி, பி.எச்.சாலையில் உள்ள பூங்கா சீரமைப்புப் பணி, தேனாம்பேட்டை மண்டலம், 120ல் கட்டப்பட்டு வரும் நவீன மாடுகள் காப்பகம், கிருஷ்ணாம்பேட்டை எரிவாயு மயானபூமியின் செயல்பாடு, பெசன்ட் நகர் சாலையில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற சமுதாய சுகாதார மையக் கட்டடம் கட்டுமானப் பணி, வார்டு-123க்குட்பட்ட ஆரியபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணி ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அறிவுரைகள் வழங்கினார்.

இந்த ஆய்வுகளின்போது மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**